செ.வெ.எண்: 24/மே நாள்: 12.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்
## இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இறுதிக் கட்ட பயிற்சி வகுப்பினை

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இறுதிக்கட்ட பயிற்சி வகுப்பு அந்தந்த சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இன்று (12.05.2016) நடைபெற்றது. மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி நடைபெறும் இடங்களுக்கு நேரிடையாகச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல் தேர்தல் பணியில் ஈடுபடுவதற்காக பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் உள்ள 301 வாக்குச்சாவடி மையங்களுக்கு 28 மண்டல அலுவலர்களும், 301 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்களும், 918 வாக்குச்சாவடி அலுவலர்களும், திருவாடானை சட்டமன்ற தொகுதியில் உள்ள 321 வாக்குச்சாவடி மையங்களுக்கு 30 மண்டல அலுவலர்களும், 321 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்களும், 980 வாக்குச்சாவடி அலுவலர்களும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 321 வாக்குச்சாவடி மையங்களுக்கு 26 மண்டல அலுவலர்களும், 321 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்களும், 988 வாக்குச்சாவடி அலுவலர்களும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள 364 வாக்குச்சாவடி மையங்களுக்கு 35 மண்டல அலுவலர்களும், 364 தலைமை வாக்குச்சாவடி அலுவலர்களும், 1108 வாக்குச்சாவடி அலுவலர்களும் ஆக மொத்தம் 119 மண்டல அலுவலர்களும், 1307 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், 3994 வாக்குச்சாவடி அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு, இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செய்யது அம்மாள் மேல்நிலைப்பள்ளி, திருவாடானை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சி.கே.மங்கலம், பிரான்சிஸ் மேல்நிலைப்பள்ளி, முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முதுகுளத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீழ முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மொத்தம் நான்கு கட்ட பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டு இன்று இறுதிக்கட்ட பயிற்சி வகுப்புகள் நடைபெறுகிறது. மேலும் 15.05.2016 அன்று வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான வாக்குச்சாவடி மையங்கள் தேர்வு செய்யப்பட்டு பணி ஆணைகள் வழங்கப்படும்.

இப்பயிற்சி வகுப்பின் போது, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (பரமக்குடி) டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (இராமநாதபுரம்) திரு.ராம்பிரதீபன், (திருவாடானை) திரு.ராஜசேகரன், (முதுகுளத்தூர்) திரு.ராமையா, உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**